**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**நான்காம் தவணைப் பரீட்சை - 2022**
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**4th Term Examination - 2022**

FWC

| | | |
|---|---|---|
| **கர்நாடக சங்கீதம் I** | **Two Hours** | **55 T I** |
| **Music I** | **Gr -13 (2022)** | |


பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**சரியான விடையினைத் தெரிவு செய்க.**

01. "மாதயை" என்னும் சௌக்காலக் கிருதி அமைந்துள்ள இராகம்.
1) ஹிந்தோளம் 2) வஸந்தா 3) ஸ்ரீறஞ்சனி 4) காபி 5) ஆபோகி

02. சண்முகப்பிரியா இராகத்தின் சாயலை வெளிப்படுத்தும் கமகம்.
1) டாலு 2) ஸ்புரிதம் 3) பிரத்தியாகதம் 4) ஆகதம் 5) ஆரோகணகமகம்

03. 'முருகா உன்மேல்' என்ற வர்ணம் அமைந்துள்ள இராகம்
1) சண்முகப்பிரியா 2) ஸ்ரீறஞ்சனி 3) ஆபோகி 4) பந்துவராளி 5) காபி

04. கனபஞ்சக ராகங்களில் ஒன்று
1) கௌளை 2) சாமா 3) சாரங்கா 4) ஆபோகி 5) பிலகரி

05. தேவாரப்பண்ணமைப்பில் பைரவி இராகத்திற்குரிய பண்
1) குறிஞ்சி 2) காந்தாரம் 3) முல்லை 4) கௌசிகம் 5) நாட்டை

06. சிவசிவசிவ என்னும் பந்துவராளி கீர்த்தணையினை இயற்றியவர்
1) தாண்டவர் 2) பாபநாசம் சிவன் 3) தியாகராஜ சுவாமிகள்
4) சியாமாசாஸ்திரிகள் 5) கோபால கிருஷ்ண பாரதி

07. பஞ்சரத்தினக் கிருதிகளில் இறுதிக்கீர்த்தணை அமைந்துள்ள ராகம்.
1) ஆரபி 2) நாட்டை 3) கௌளை 4) ஸ்ரீ 5) வராளி

08. ஷேத்ர்க்ஞரால் பாடப்பட்ட முதலாவது பதம்.
1) ஏமோதெலியது 2) எவ்வடே ஒபாமா 3) பாலவினனே
4) அலிகிதே 5) ஸ்ரீபதி சுதுவாருகி

09. நாட்டார் பாடல்களை இசைப்பதற்கு மிகப் பொருத்தமான தாளம்
1) தேசாதி தாளம் 2) துருவதாளம் 3) சாபுதாளம் 4) அடதாளம் 5) ஏகதாளம்

10. வீணையில் காணப்படும் தந்திகளை விட கோட்டுவாத்தியத்தில் மேலதிகமாகக் காணப்படும் பிரதான பாட்டுத் தந்தி
1) ஸாரணி 2) பஞ்சமம் 3) பக்கபஞ்சம் 4) பக்கஸாரணி 5) கெச்சு சாரணி

11. "வலசிவச்சி" எனத் தொடங்கும் வர்ணத்தில் பிரதிமத்திம இராகப் பிரயோகம் இடம்பெறும் பகுதி
1) சரணம் 2) முத்தாயிஸ்வரம் 3) அனுபல்லவி
4) பல்லவி 5) சரணஸ்வரங்கள்

12. கர்நாடக சங்கீத குரலிசைக் கச்சேரியில் பிரதானமாக இடம்பெறும் இசைக்கருவிகள்
1) கெஞ்சிரா - கடம் 2) வயலின் - கடம் 3) வயலின் - மிருதங்கம்
4) மிருதங்கம் - கடம் 5) புல்லாங்குழல் - கடம்

13. ஹிந்துஸ்தானிய இசையில் முதலில் கற்பிக்கப்படும் இராகம்.
1) பிலாவல் 2) கமாஜ் 3) மார்வா 4) பைரவ் 5) பூர்வி

14. பின்வருவனவற்றுள் கலப்பு இராகம் எனப்படுவது
1) சாயாலக ராகம் 2) சுத்தராகம் 3) பாஷாங்ராகம்
4) கனபஞ்சக ராகம் 5) சங்கீர்ண ராகம்

15. "ஆரபி மானம்" எனும் இராகமாலிகையில் இடம்பெறும் தாய் ராகம்
1) பைரவி 2) ஆனந்த பைரவி 3) கல்யாணி
4) அம்சத்வனி 5) சங்கராபரணம்

16. வஸந்தா இராகத்தின் மத்திமத்தினைக் கிரகபேதம் செய்யும் போது தோன்றும் இராகம்
1) ஆனந்தபைரவி 2) சாமா 3) ரமணி 4) ரீதிகௌளை 5) நடபைரவி

17. நிஷாதாந்திய இராகத்திற்கு ஓர் உதாரணம்
1) நாதநாமக்கிரியை 2) குறிஞ்சி 3) நீலாம்பரி
4) புன்னாகவராளி 5) நாட்டைக்குறிஞ்சி

18. 72 மேளகர்த்தாவில் 4வது சக்கரத்தில் வரும் 3வது இராகம்
1) சூர்யகாந்தம் 2) நடபைரவி 3) கீரவாணி
4) கரகரப்பிரியா 5) மேசகல்யாணி

19. அஷ்டபதி இயற்றிய காலப்பகுதி
1) 12ம் நூற்றாண்டு 2) 10ம் நூற்றாண்டு 3) 15ம் நூற்றாண்டு
4) 16ம் நூற்றாண்டு 5) 17ம் நூற்றாண்டு

20. திரி அன்னியஸ்வர பாஷாங்க இராகத்திற்கு உதாரணம்
1) அடானா 2) ஹிந்துஸ்தான் காபி 3) பிலகரி
4) ஸாரங்கா 5) பைரவி

21. ஸரிகமதநிஸ் - ஸ்நிதமகரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்
1) ஆபோகி 2) ஆரபி 3) கமாஸ் 4) ஸ்ரீறஞ்சனி 5) வஸந்தா

22. இயற்கையினை ரசிப்பவராகவும், பறவைகள், ஏனைய குரல்வகைகள் போன்று பாவனை செய்வதில் திறமை மிக்கவர்
1) தான்சேன் 2) பாக் 3) மொஸாட் 4) அமிர்குஸ்ரு 5) பண்டே

23. ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்துவரும் அணி
1) சங்கரி 2) யமகம் 3) திருவு 4) மணிப்பிரவாளம் 5) ஸ்வராட்சரம்

24. வக்ர - ஷாடவ – சம்பூர்ண ராகம்
1) பிலகரி 2) சாமா 3) ஆனந்தபைரவி 4) சாரங்கா 5) நீலாம்பரி

25. ஹிந்துஸ்தானிய இசையில் தரானா என்ற உருப்புக்கு ஒப்பான உருப்படி வகை
1) கஜல் 2) தில்லானா 3) ஜவாளி 4) அஷ்டபதி 5) பதம்

26. "இன்னம் என் மனம்" எனும் பதவர்ணம் அமைந்துள்ள இராகம்.
1) காம்போதி 2) கல்யாணி 3) சாவேரி 4) பிலகரி 5) சாருகேசி

27. பாரிஜாய முத்திரைகளை தனது உருப்படிகளில் கையாண்டவர்
1) ஸ்வாதித் திருநாள் மகாராஜா 2) பாபநாசம் சிவன் 3) சியாமாசாஸ்திரிகள்
4) தியாகராஜர் 5) தாண்டவர்

28. பிலிபஸ்பன்ஸ் நாட்டின் மிக உயர்ந்த விருதான "மச்சாசாய்" விருதினைப் பெற்றவர்
1) வீணை பாலச்சந்தர் 2) வீரமணிஜயர் 3) M.S சுப்புலட்சுமி
4) M.L வஸந்தகுமாரு 5) நீலாமணி

29. சண்முகப்பிரியா இராகத்தின் மேள எண்
1) 65 2) 22 3) 51 4) 28 5) 56

30. 35,108,175 தாளங்களிலும், ஆபூர்வ தாளங்களிலும் பாடல்களை இயற்றியவர்.
1) முத்துத் தாண்டவர் 2) அருணகிரிநாதர் 3) தீட்வுதர்
4) பாபநாசம் சிவன் 5) வீரமணி ஜயர்

31. உன்னையால்லால் எனும் கீர்த்தனை அமைந்துள்ள இராகம் .
1) ஹிந்தோளம் 2) பந்துவராளி 3) கல்யாணி 4) மோகணம் 5) ஆரபி

32. கடம் ஒரு
1) துணைத் தாளவாத்தியம் 2) உலோக வாத்தியம் 3) தந்தி வாத்தியம்
4) பிரதான வாத்தியம் 5) அயன் வாத்தியம்

33. ஒரு இராகத்தில் பல தடவைகள் உச்சரிக்கும் ஸ்வரம்
1) அல்பத்துவம் 2) மந்தரம் 3) பகுத்துவம் 4) தாரம் 5) நியாசம்

34. ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், சாதாரணகாந்தாரம், சுத்தமத்திமம், சதுஸ்ருதி தைவதம், கைகிசி நிஷாதம் எனும் ஸ்வரஸ்தானங்களை உடைய இராகம்
1) ஆபோகி 2) ஸ்ரீறஞ்சனி 3) ஹிந்தோளம் 4) ஸாரங்கா 5) மோகணம்

35. தமிழ் மொழியில் பஞ்ச சூளாதிகளை இயற்றியவர்
1) K பொன்னையாப்பிள்ளை 2) சியாமா சாஸ்திரிகள்
3) கோபால கிருஷ்ணபாரதியார் 4) தீட்சிதர்
5) தியாராஜ சுவாமிகள்

36. உபய வக்ர இராகங்களில் ஒன்று.
1) ஆனந்தபைரவி 2) ரீதிகௌளை 3) கமாஸ்
4) ஸ்ரீராகம் 5) ஸகானா

37. 'அலகு யாழ்' என அழைக்கப்படும் வாத்தியம்
1) வீணை 2) கெஞ்சிரா 3) வயலின் 4) தம்புரா 5) முகர்சிங்

38. தபேலா, ஸிதார் போன்ற வாத்தியங்களை உருவாக்கியவர்
1) அமிர்குஸ்ரு 2) பீதோவன் 3) பாக் 4) தான்சேன் 5) மொகாட்

39. மகா நாடக வீணை என அழைக்கப்படும் வாத்தியம்
1) வீணை 2) வயலின் 3) கோட்டுவாத்தியம்
4) ஸிதார் 5) சரஸ்வதி வீணை

40. பின்வருவனவற்றுள் தேவாலய வாத்தியங்களாவன.
1) திருச்சின்னம், சங்கு 2) கடம், மோர்சிங் 3) வயலின், வீணை
4) பேரிகை, தமுக்கு 5) தபேலா, மிருதங்கம்

41. ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய ராகம்
1) சாமா 2) ஆபோகி 3) ஸாவேரி 4) கமாஸ் 5) ஸ்ரீறஞ்சனி

42. ருத்ர சக்கரத்தில் 3வது இராகம்
1) ஸதாங்கி 2) வாசஸ்பதி 3) சரசாங்கி
4) தர்மவதி 5) ஸிம்மேந்திர மத்திமம்

43. கேட்கும் திறனை இளந்த பின்னரும் இசை நிகழ்ச்சியினை நிகழ்த்திய கலைஞர்
1) பாத்கண்டே 2) பீதோவன் 3) மொஸாட் 4) பாக் 5) தான்சேன்

44. மனோதர்ம இசையில் சாகித்தியம் அமைந்த பகுதி.
1) இராகம் 2) தாளம் 3) கற்பனாஸ்வரம் 4) நிரவல் 5) அகாரம்

45. சம்பூர்ண - ஷடாவ இராகத்திற்கு ஓர் உதாரணம்
1) ஆரபி 2) ஸாரங்கா 3) பைரவம் 4) பைரவி 5) ஸ்ரீறஞ்சனி

46. பாடசாலை மாணவர்களிடையே ஆற்றுகைத் திறன், நன் மனப்பாங்கு கூட்டுச் செயற்பாடு, விட்டுக் கொடுத்தல் என்பவற்றினை வெளிப்படுத்தும் மாணவர் செயற்பாடு
1) களப்பயணம் 2) கண்காட்சி 3) மாணவர் ஆக்க நிகழ்சி
4) விமர்சனைக் கட்டுரை 5) வெளிக்களப் புத்தகம்

47. கடபஜாதி சக்கரத்தில் யாதியஷ்டவில் இடம்பெறும் ஆறாவது எழுத்து
1) ச 2) வ 3) ஹ 4) ஸ 5) ஷ

48. சௌக்காலக் கிருதியை மாணவர்கள் இனம் காண்பதற்குரிய முக்கிய அம்சங்களில் ஒன்று
1) ஆரோகண அவரோணங்களை முழுமையான பயிற்சி
2) உருப்படிகளை இரண்டு களையாகத் தாளம் போடுதல்
3) உருப்படிகள் அமைந்த இராகத்தினை ஆலாபனை செய்தல்
4) உருப்படியில் மத்திம கால சாகித்தியம் அமைந்திருத்தல்
5) உருப்படிகள் அமைந்துள்ள இராகத்தின் ஸ்வரஸ்தானங்களை கூறுதல்

49. ஒரு பாடலில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் பயன்படுத்தப்பட்டால்
1) யமகம் 2) அனுபிராசம் 3) ஸங்கதி
4) சாகித்தியம் 5) அன்னியப்பிராசம்

50. ஹிந்தோள இராகத்திற்கு இணையான ஹிந்துஸ்தானிய இராகம்.
1) மால்கௌஸ் 2) சாமா 3) பிலாவல் 4) கமாஸ் 5) பூர்வி

(50 x 2 = 100 புள்ளிகள்)

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2022

FWC

| | | | |
|---|---|---|---|
| கர்நாடக சங்கீதம் | II | Three Hours | 55 T II |
| Music | II | Gr -13 (2022) | |

### பகுதி II

❖ "அ" பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் "ஆ" பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் "இ" பகுதியில் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

### "அ" பகுதி

**01. சுருக்கமான விடை தருக.**

1) அமீர்குஸ்ருவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தாளங்களுள் ஒன்று
2) தாலாட்டுப் பாடல்கள் பாடப்படுவதற்குரிய இராகம் யாது?
3) தாதுவின் அமைப்பில் கீதத்தினை ஒத்திருக்கும் உருப்படி எது?
4) மிஸ்ரஜாதி அடதாளம் கண்ட கதிபேதம் அடையும் போது உண்டாகும் மொத்த எண்ணிக்கை யாது?
5) "தெலிசெவக" எனும் ஜாவளியினை இயற்றியவர் யார்?
6) $\underset{8}{\cup}$ இக்குறியீடு குறிக்கும் அங்கத்தின் பெயர் யாது?
7) ஆபோகி இராகத்தின் தாய் ராகம் எது?
8) 'மாதர் மடப்பிடியும்' எனும் தேவாரம் அமைந்துள்ள பண் எது?
9) சாகித்தியத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வருமாயின் அவ்அணி யாது?
10) ஸ்ரீறஞ்சினி இராகத்தின் தாய் இராகம் யாது?
11) பகுத்வனி வாத்தியங்கள் இரண்டு தருக.
12) வேங்கடமகியின் இரண்டு முத்திரைகள் தருக.
13) திவிதீய கனபஞ்சக ராகங்கள்இரண்டு தருக.
14) கடம் வாசிப்பதில் பிரபல்யம் அடைந்த இரு கலைஞர்கள்
15) தபேலா வாத்தியத்தின் இரு பாகங்களும் எவை?

### "ஆ" பகுதி

02\. 1) (1) ஸப்த தாளங்களும் ஜாதி பேதத்தினால் 35 தாளங்கள் ஆகும் முறையினை விளக்குக. (3 புள்ளிகள்)

(2) துருவதாளம் ஜாதி பேதமடையும் விதத்தினை அட்டவணைப்படுத்துக (5 புள்ளிகள்)

(3) 35 தாளங்களும் கதிபேதங்களினால் 175 தாளங்களாகும் முறையினை மட்டியதாளம் அடதாளம் ஆகியவற்றினை உதாரணங்கமாகக் கொண்டு அட்டவணைப்படுத்துக. (12 புள்ளிகள்)

03. பின்வரும் இசை உருப்படிகளுள் இரண்டிற்கு உதாரணங்களுடன் விளக்கம் தருக.

(1) ஜாவளி

(2) இசைக்கச்சேரியில் இறுதியாகப் பாடப்படும் உருப்படி

(3) சூளாதி

## “இ” பகுதி

04. பின்வரும் இராகங்களுள் இரண்டிற்கு விரிவான இலட்சணம் தருக?

1) ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ எனும் ஆரோகண அவரோகணத்தை உடைய இராகம்

2) ஹிந்தோளம்

3) ஹிந்துஸ்தான் காபி

05. 1) ஹிந்துஸ்தானிய இசையில் மிகமுக்கியமான தாள வாத்தியம் யாது?

2) இவ்வாத்தியத்தின் அமைப்பினையும் வாசிக்கும் முறையினையும் குறிப்பிடுக

3) இவ்வாத்தியத்தின் சிறப்பம்சங்களைக் கூறுக.

4) இவ்வாத்தியத்தில் தேர்ச்சி பெற்று பிரபல்யம் அடைந்த வாக்கேயகாரர் இருவரின் பெயர்களைத் தருக.

06. அருணகிரி நாதர் சைவசமயத்திற்கு மாத்திரம் அன்றி இசைக்கும் அளப்பரிய தொண்டாற்றியுள்ளார் பின்வரும் விடயங்கள் தொடர்பாக விடையளிக்குக.

1) அருணகிரி நாதருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் மூன்றினைத் தருக.

2) இவர் இயற்றிய மூன்று நூல்களைத் தருக.

3) இவரது வாழ்க்கை வரலாற்றினைக் கூறுக.

4) இவர் இசைக்காற்றிய தொண்டினை விளக்குக.

07. கர்நாடக இசைக்கும் ஹிந்துஸ்தானிய இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

08. 20ம் நூற்றாண்டின் இலங்கையின் கர்நாடக இசைவளர்ச்சி பற்றி ஆராய்க.

அல்லது

இசை தொடர்பான கண்காட்சி ஒன்றினை நாடத்துவதற்குப் பொருத்தமான செயலொழுங்குகளை விபரிக்குக.